








## நீலகிரி மாவட்டம்

# கூடலூர் தொகுதி தி.மு.க. - தோழமைக் கட்சி நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.என்.ராஜு தலைமையில் நடைபெற்றது!

நிலகிரி, பிப். 22 -

நீலகிரி மாவட்டம், கூடலூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க., தோழமைக் கட்சி நிர்வாகிகள் கூட்டம் உதகை ஜெம் பார்க் ஓட்டல் கூட்ட அரங்கில் மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எம். ராஜூ தலைமையில், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், தேர்தல் பணிசெயலாளர்-அரசு தலைமைக் கொறடா கா.ராமசந்திரன், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் தி.மு.க., துணை பொதுச்செயலாளர் - நீலகிரி நாடாளு மன்ற உறுப்பினர் ஆ.இராசா கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

முன்னதாக சி.பி.எம் மூத்த தலைவர் வாசு, அகில இந்திய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கோசி பேபி, சி.பி.ஐ முகமது கனி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சகாதேவன், மாவட்டச் செயலாளர் துரை புவனேஸ்வரன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்டச்செயலாளர் அனீபா ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

கூட்டத்தில் கூடலூர் தொகுதியில் கடந்த 50 ஆண்டுகளாக நிலுவையிலுள்ள ஜென்மம் நிலம் பிரிவு 17 நிலப்பிரச்சினைக்கு தீர்வுகாண கடந்த 30.1.2025 அன்று தலைமைச் செயலகத்தில் அரசு அதிகாரிகளை அழைத்து ஆலோசனை மேற்கொண்ட கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியும் வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது. மேலும், இதற்கு உறுதுணையாக இருந்து செயல்பட்ட கழக துணைபொதுச்செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசாவுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் திமுக சார்பில் மாவட்ட அவை தலைவர் போஜன், துணை செயலாளர்கள் ரவிகுமார், லட்சுமி, பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், திராவிடமணி, காசிலிங்கம்,செந்தில் ரங்கராஜ், மாநிலபொறியாளர் அணி துணை செயலாளர் பரமேஸ்குமார், நகர செயலாளர்கள் ஜார்ஜ், இளஞ்செழியன், சேகரன், ஒன்றிய செயலாளர்கள் லியாகத் அலி, சிவானந்த ராஜா, சுஜேஷ், ஓவேலி பேரூர் செயலாளர் சின்னவர், பொதுக்குழு உறுப்பினர் சதக்கத்துல்லா, காளிதாசன், அமிர்தலிங்கம், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ராஜேந்திரன், மாவட்ட அமைப்பாளர்கள் சசிகுமார், எல்கில் ரவி, காங்கிரஸ் கட்சி சார்பில் கோபிநாதன், அசரப், சிவராஜ், சாஜி, அசைனார், இபுனு, யாசீன், தாஹீர், குட்டன், ஜெய்சன், முஸ்லிம் லீக் சார்பில் ஆலி உப்பட்டி, விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் ராஜேந்திரபிரபு, துயில மேகம், மகேசன், அசரப் உட்பட ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர்.

முடிவில் மாவட்ட துணை செயலாளர் ரவி குமார் நன்றி கூறினார்.



கோவை, காந்திபுரம் அருகில், சத்தி ரோட்டில் ரூ.3.68 கோடி மதிப்பீட்டில் புதியதாக ஆம்னி பேருந்து நிலையத்தை தமிழ்நாடு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி ஆகியோர் திறந்து வைத்தனர். தொடர்ந்து, கோவை மாநகராட்சி, கோவை, நீலகிரி, திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட நகராட்சி பகுதிகளில், ரூ30.72 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட, 15 புதிய திட்டப் பணிகளையும் ரூ 271 கோடியில் 1028 புதிய திட்டப் பணிகளுக்கு அமைச்சர்கள் கே.என். நேரு,வி.செந்தில்பாலாஜி வெள்ளக்கோவில் சாமிநாதன், கயல்விழி செல்வராஜ் ஆகியோர் அடிக்கல் நாட்டினர். தொடர்ந்து ஆம்னி பேருந்து நிலையத்தை அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் பார்வையிட்டனர். இந்த திறப்பு விழாவில், மாவட்ட ஆட்சியர் பவன்குமார், மேயர்கள் ரங்கநாயகி, தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், முன்னாள் அமைச்சர் இராமச்சந்திரன், தி.மு.க.மாவட்டச் செயலாளர்கள் நா.கார்த்திக், தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன்,எம்பிக்கள் கணபதி ராஜ்குமார், ஈஸ்வரசாமி, ,துணைமேயர் வெற்றிசெல்வன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.